


# கொரிந்துவில் பவுலின் ஊழியம்


"இராத்திரியிலே
கர்த்தர் பவுலுக்குத்
தரிசனமாகி: நீ
பயப்படாமல் பேசு,
மவுனமாயிராதே;
நான்
உன்னுடனேகூட
இருக்கிறேன்,
உனக்குத்
தீங்குசெய்யும்படி
ஒருவனும் உன்மேல்
கைபோடுவதில்லை;
இந்தப் பட்டணத்தில்
எனக்கு அநேக
ஜனங்கள் உண்டு
என்றார். "
(அப் 18:9, 10)

ரோமர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்களுக்கு அடுத்தபடியாக கொரிந்தியர்களுக்கு எழுதிய நீண்ட நிருபங்களே பவுலால் எழுதப்பட்ட மிக நீண்ட நிருபங்களாகும்.

எஞ்சியிருக்கும் அந்த இரண்டு நிருபங்களும் சில வார இடைவெளியிலேயே எழுதப்பட்டன. சகோதரர்களுக்கு இடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளால் உருவாகும் சிக்கலான சூழ்நிலைகளை தீர்ப்பதற்கான நடைமுறைக்கு ஏற்ற ஆலோசனைகளை அவற்றில் நாம் காணலாம்.



அவர்களுடைய செய்தியை சரியாய் புரிந்துகொள்ள, அவை எந்த சூழலில் எழுதப்பட்டன என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.



- பவுலின் அழைப்பு
- கொரிந்துவிற்கான பயணம்
- கொரிந்து பட்டணம்
- கொரிந்தியர்கள்
- கொரிந்தியருக்கு எழுதிய நிருபங்கள்



# பவுலின் அழைப்பு

"மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும், அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்," (கலாத்தியர் 1:1)

இயேசுவால் தெரிந்தெடுக்கப்பட்ட பன்னிருவரை தவிர, மத்தேயு போன்ற பிற இறைதூதர்களையும் வேதாகமம் குறிப்பிடுகிறது(அப் 1:26), பர்னபா (அப் 14:4), யாக்கோபு மற்றும் பவுல் (1 கொரிந்தியர் 15:7-9).



| | |
|---|---|
| பவுல் எப்படி அப்போஸ்தலரானார்? | இயேசுவின் தெரிவினால் (கலா. 1:1) |
| அவர் எப்போது தெரிந்தெடுக்கப்பட்டார்? | அவருடைய தாயின் கருவிலே (கலா. 1:15) |
| அவர் எப்போது அழைக்கப்பட்டார்? | தமஸ்குவுக்கு போகும் வழியில் (அப் 22:6-7) |
| அவர் யாருக்கு அப்போஸ்தலராய் இருந்தார்? | புறஜாதிகளுக்கு (கலா. 2:9) |



அவர் அழைக்கப்பட்ட தருணத்திலிருந்தே, பவுலின் வாழ்க்கை இயேசுவை மையமாக கொண்டிருந்தது. அவர் இயேசுவைப் பற்றி சிந்தித்தார், இயேசுவைப் பற்றி பேசினார், இயேசுவை எல்லாருடனும் பகிர்ந்துகொண்டார்.

இதன் காரணமாக, கொரிந்துவுக்கு வந்த முதல் கணத்திலிருந்தே, இயேசுவே அவருடைய செய்தியின் மையமாக இருந்தார் (1 கொரி. 2:2).

# கொரிந்துவிற்கான பயணம்




"அதன்பின்பு பவுல் அத்தேனே பட்டணத்தை விட்டு, கொரிந்து பட்டணத்துக்கு வந்து," (அப் 18:1)

தனது இரண்டாவது மிஷனரி பயணத்தின் போது, ஐரோப்பாவிற்கு செல்லுமாறு பரிசுத்த ஆவியானவரால் பவுல் தூண்டப்பட்டார் (அப் 16:6-10). அங்கே அவர் பிலிப்பியிலிருந்து(அப் 16:12, 38-39), தெசலோனிக்கேயாவிற்கும் (அப் 17:1, 5, 9-10), பெரோயாவிற்கும் (அப் 17:13-14) நாடு கடத்தப்பட்டார்



அத்தேனேவில், ஜெப ஆலயத்தில் யூதர்களுக்கும் சந்தைவெளியில் புறஜாதிகளுக்கும் பிரசிங்கித்த பிறகு, அவர் மார்ஸ் மேடையில் பிரசங்கிக்க அழைக்கப்பட்டார் (அப் 17:16-21). சிறப்பானதொரு சொற்பொழிவுக்கு பிறகும், வெகு சிலரே இயேசுவை ஏற்றுக்கொண்டனர் (அப் 17:34).



அத்தேனே விட்டு புறப்பட்ட பவுல் கொரிந்துவுக்கு சென்று, அங்கு ஆக்கில்லா, மற்றும் பிரிஸ்கில்லாவுடன் இணைந்து கூடாரம் செய்யும் வேலையை செய்தார்(அப் 18:1-3).



தனது வழக்கப்படியே, அவர் ஜெப ஆலயத்தில் யூதர்களுக்கும் பின்னர் புறஜாதியாருக்கும் பிரசங்கிக்க தொடங்கினார் (அப் 18:4-8). கொரிந்துவில் அவர் தங்கியிருந்த போதும், அதன் பின்னர் அத்தேனேவில் "ஏமாற்றத்திற்கு" பின்னும், பவுல் மனித ஞானத்தை பயன்படுத்தாமல், "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையே," பிரசங்கிக்க தீர்மானித்தார்(1 கொரிந்தியர் 2:2).

# கொரிந்து பட்டணம்


“அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும்,” (1 கொரிந்தியர் 8:5பி)




கிமு 146ல் ரோமாபுரியால் கொரிந்து நகரம் தரைமட்டமாக்கப்பட்டது. பின்னர், கிமு 46ல் ஜூலியஸ் சீசர் அங்கு ஓய்வுபெற்ற படைவீரர்கள் மற்றும் சுதந்திரமான மனிதர்களை கொண்ட ஒரு குடியேற்றத்தை அனுப்பினார். இறுதியாக, கிமு 44ல் அந்நகரம் முழுமையாக மீண்டு எழுந்தது. பவுல் அங்கு சென்றடைந்த சமயத்தில், அது ஏற்கனவே ஒரு முக்கிய வணிக மையமாக திகழ்ந்தது.



கொரிந்து பட்டணத்தின் முக்கியத்துவம் அதன் அமைவிடத்தில் இருந்தது: கொரிந்து வளைகுடாவில் உள்ள, லெகேயம்; மற்றும், சரோனிக் வளைகுடாவில் உள்ள சென்க்கிரியா ஆகிய இரண்டு முக்கிய வணிகதுறைமுகங்களின் சேவையை பெற்றிருந்த கொரிந்து நிலசந்தி பகுதியில் அமைந்திருந்தது. அவரது வணிக முயற்சிகள் பவுலை ஒரு கூடாரம் செய்பவராக பணியாற்ற அனுமதித்தன. ஆனால் கொரிந்துவின் செல்வம் (அத்தேனே செல்வத்திற்கு இணையானதாக இருந்தது) பல தீமைகளையும் கொண்டிருந்தது.



விக்கிரக வழிபாடும் பாலியல் ஒழுக்ககேடும் நகரத்தை நிரப்பி, அதன் கலாச்சாரத்தில் ஊடுருவியிருந்தன. திருச்சபைக்குள் மெல்ல பரவிக் கொண்டிருந்த இந்த பிரச்சனைகளை வேரோடு களைவதே, கொரிந்தியருக்கு பவுல் அளித்த செய்தியின் பெரும்பகுதியின் நோக்கமாக இருந்தது.



# கொரிந்தியர்கள்

"இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மௌனமாயிராதே;" (அப் 18:9)





கொரிந்துவிலிருந்த யூதர்கள் அந்த செய்தியை நிராகரித்ததால், பவுல் ஜெப ஆலயத்தை விட்டு வெளியேறி, அதற்கு அருகிலிருந்த ஒரு வீட்டில் புறஜாதியினரை சந்திக்க தொடங்க வேண்டியதாயிற்று (அப் 18:4-7).



"புறஜாதியினரிடையே அவர் கண்ட ஒழுக்கக்கேடும், யூதர்களிடமிருந்து அவருக்கு கிடைத்த அவமதிப்பும் நிந்தனையும் அவருக்கு மிகுந்த மனவேதனையை அளித்தன. அங்குள்ள மக்களை கொண்டு ஒரு சபையை உருவாக்க முயல்வது விவேகமானதா என்று அவர் ஐயமுற்றார்" (எலன் ஜி உவைட், அப்போஸ்தலருடைய நடபடிகள், பக். 250).



அந்த வேளையில், கொரிந்தியர்களிடையே தம் பணியை தொடர்ந்து செய்யுமாறு பவுலை ஊக்குவிப்பதற்காக இயேசு ஒரு தரிசனத்தில் தோன்றினார், அங்கே அந்த செய்தியை ஏற்றுக்கொள்பவர்கள் பலர் இருப்பார்கள் என்றும் அவருக்கு உறுதியளித்தார் (அப் 18:9-10).

இந்த தரிசனத்தால் பலப்படுத்தப்பட்ட பவுல், ஒன்றரை ஆண்டுகள் கொரிந்துவில் தங்கினார் (அப் 18:11). இறுதியாக, யூதர்கள் பவுலை நீதிமன்றத்தின் முன் கொண்டு வந்தார்கள் (அப் 18:12-13). அவர் கொரிந்துவை விட்டு சென்ற சமயத்தில், ஒரு பெரிய சபை நிறுவப்பட்டிருந்தது (அப் 18:18).

# கொரிந்தியர்களுக்கு எழுதிய நிருபங்கள்

"ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது."
(1 கொரிந்தியர் 1:11)



## 1 கொரிந்தியர் 1-6

சபையில் நிலவும் பல சிக்கல்களை பற்றி குலோவேயாள் மூலம் அறிந்த பவுல், பிரிவினைகள், பாலியல் ஒழுக்கக்கேடு, சச்சரவுகள் மற்றும் விபச்சாரம் ஆகியவை குறித்து அவர்களை கடிந்துகொள்கிறார்.



## 1 கொரிந்தியர் 7-16

திருச்சபையிலிருந்து பல கேள்விகள் அடங்கிய ஒரு கடிதத்தையும் குலோவேயாளின் குடும்பத்தினர் அவரிடம் கொண்டு வந்தனர்: திருமணம்; விவாகரத்து; பிரம்மச்சரியம்; விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட உணவு; ஆராதனையின் போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குமுறை; ஆவிக்குரிய வரங்களின் பயன்பாடு; மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய தலைப்புகளில் பவுல் அந்த கேள்விகளுக்கு பதிலளித்தார்.



## 2 கொரிந்தியர்

பவுல் இன்னும் பல நிருபங்களை எழுதியிருந்தாலும் (அநேகமாக எஞ்சியிருக்கும் இந்த இரண்டுக்கும் முன்பாகவோ அல்லது அவற்றுக்கு இடைப்பட்ட காலத்திலோ), பாதுகாக்கப்பட்டவற்றில் இது இரண்டாவது நிருபமாகும். கொரிந்தியர்கள் சில சிக்கல்களை தீர்த்துக்கொண்ட விதத்திற்காக பவுல் அவர்களை பாராட்டுகிறார், அதேவேளையில், சுற்றியுள்ள கலாச்சாரத்தின் தாக்கத்தை தவிர்த்து, நற்செய்தியின் கண்ணோட்டத்தில் உலகை பார்க்குமாறு அவர்களை வலியுறுத்துகிறார்.



“பெரிய நகரங்களில் நற்செய்தியை அறிவிக்க முற்படும்போது எதிர்கொள்ள வேண்டிய தீமை, அநீதி மற்றும் ஒழுக்கக்கேடு ஆகியவற்றைக் கண்டு, இயேசுவின் அடியார்கள் மனசோர்வடையக் கூடாது. தீய நகரமான கொரிந்துவில் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அளித்த அதே செய்தியை கொண்டு, அத்தகைய ஒவ்வொரு ஊழியரையும் ஆண்டவர் உற்சாகப்படுத்துவார்: “இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்.” அப் 18:9,10... [...] வன்முறையும் குற்றசெயல்களும் நிறைந்த எந்தவொரு நகரத்திலும், முறையான போதனையின் மூலம் இயேசுவின் சீடர்களாக மாறக்கூடிய பலர் உள்ளனர். இவ்வாறாக, ஆயிரக்கணக்கானோரை இரட்சிப்பை அருளும் சத்தியத்தின் மூலம் சென்றடையவும், கிறிஸ்துவை தங்கள் தனிப்பட்ட இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு அவர்களை வழிநடத்தவும் முடியும்.”

எலன் ஜி உவைட் (தீர்க்கதரிசிகளும் இராஜாக்களும், பக். 277)